பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 31உ (15—7—67) சனி ★ வெளியூர்: ஆனி 32உ (16—7—67) ஞாயிறு [இதழ்: 27

தீ விபத்து--சதித் திட்டம்

கைதான இருவர் காங்கிரசுக்காரர்!

துப்பறியும் தனி அதிகாரி தரும் தகவல்

சென்னை, ஜூலை 15—

சென்னைத் தீ விபத்துக்கள் தொடர்பாக இரண்டு காங்கிரசுக்காரர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தமிழகக் காவல் துறைத் தலைமை அதிகாரி (இன்ஸ்பெக்டர்-ஜெனரல்) திரு. எப்.வி. அருள் செய்தியாளர்களிடம் அறிவித்ததை, தீ விபத்து பற்றிய துப்பறியும் தனி அதிகாரியான திரு. ஆர்.என். கிருஷ்ணசாமியும் உறுதிப்படுத்தும் வகையில் தகவல் தந்திருக்கிறார்.

திரு. அருள் செய்தியாளர்களிடம் தகவல் தந்துகொண்டிருந்தபோது உடனிருந்த திரு. ஆர்.என். கிருஷ்ணசாமியிடம், 'கைது செய்யப்பட்டிருப்பவர்கள் காங்கிரசுக்காரர்கள்தான் என்று எப்படிக் கூறப்படுகிறது?' என்று செய்தியாளர் ஒருவர் கேட்டிருக்கிறார்; அதற்கு அந்த அதிகாரி பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"கடந்த பொதுத் தேர்தலின்போது இந்த நபர்கள் காங்கிரசுக்காக வேலை செய்தார்கள் என்பதை மெய்ப்பிப்பதற்குப் போதிய ஆதாரம் இருக்கிறது."

தொடர்ந்து தீவிரப் புலன் விசாரணை நடைபெற்றுவருவதாகவும், மேலும் பலர் கைதாகக்கூடும் என்றும் திரு. கிருஷ்ணசாமி கூறினார்.

நகரில் நடைபெற்றுவரும் தீ விபத்துக்கள், 'ஒரு சதித் திட்டத்தின் விளைவே' என்பதை மீண்டும் உறுதிப்படுத்திய திரு. அருள், தீ வைப்பதில் பல முறைகள் கையாளப்படுவதாகவும், அவற்றில் ஒரு முறையே தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், பல தீ விபத்துக்களில் கையாளப்பட்ட முறை ஒரேவிதமாக இருக்கிறது என்றும், 'பாஸ்பரஸ்' போன்ற பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவை பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

ஐ. ஜி. விளக்கம்

சென்னை நகரில் நடந்த தொடர் தீ விபத்துக்கள் சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"இந்த இருவரும் கடந்த வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்; இருவருமே காங்கிரசு ஊழியர்கள்" என்று போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் திரு. எப். வி. அருள், செய்தியாளர்களிடம் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறிய விவ விவரங்களாவன :—

கைது செய்யப்பட்டிருக்கும் இருவரில் ஒருவரான 30 வயதுள்ள பட்டு என்கிற பத்மநாபன் ஜூலை 5-ம்நாள் ஆண்டியம்மன் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்து சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். அங்கு சுமார் 2,000 குடும்பங்கள் வசித்த 137 குடிசைகள் நாசமடைந்தன. இவர் கண்ணம்மாபேட்டையில் வசிப்பவர் என்றும், இவர் ஒரு லாரி டிரைவர் என்றும் சவகர் சனநாயக சோஷலிஸ்டு சங்கம்—லால்பகதூர் சாஸ்திரி சேவா சங்கம் இவற்றில் இவர் உறுப்பினர் என்றும் திரு. எப். வி. அருள் கூறினார்.

அரிராம் என்ற 36 வயதுள்ள துறைமுகத் தொழிலாளி, கோடம்பாக்கம்-புதூர் நல்லான்குப்பத்தில் ஏற்பட்ட தீ சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கோடம்பாக்கம்--புதூர் அசோக் நகரிலுள்ள காமராஜ் சோஷலிஸ்டு தேசிய சேவா சங்கத்தின் செயலாளர் என்றும் ஐ. ஜி. தெரிவித்தார்.

அதிக இருப்பு வைத்திருந்த பஞ்சுக்குத் தீவைத்தனர்?

சோதனை அதிகாரிகள் வருவதற்குமுன் பிர்லா ஆலையில் நடந்த நிகழ்ச்சி

புதுடில்லி, ஜூலை 14—

பிர்லாவுக்குச் சொந்தமான பருத்தி ஆலைகள் சிலவற்றில், அனுமதிக்கப்பட்ட அளவுக்குமேல் பஞ்சு இருப்பு வைக்கப்பட்டிருந்ததாக வணிகத் துறைத் துணை அமைச்சர் மகம்மது ஷாபீ குவாஷி மக்கள்சபையில் தெரிவித்தார்.

கேள்வி :—"குவாலியரில் உள்ள பிர்லாவின் ஆலையில், கண்காணிப்பு அதிகாரிகள் சோதனையிட வருவதற்குச் சில மணி நேரத்துக்கு முன் ரூ. 10 இலட்சம் பெறுமானமுள்ள பஞ்சு, வேண்டுமென்றே கொளுத்தப்பட்டுவிட்டது உண்மையா?"

இதற்கு துணையமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"குவாலியரில் உள்ள ஜே. சி. ஆலையில், சூன் 16-ஆம் நாள் பகல் 12-30 மணிக்கு தீப்பிடித்ததாகவும், அதனால் 1970 பேல் பஞ்சில் ஒரு பகுதி சேதமடைந்ததாகவும், ரூ. 4 இலட்சம் அளவுக்கு இழப்பு ஏற்பட்டதாகவும் தீப்பற்றியதற்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது."

கருத்திருமன் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானம்

அவைத் தலைவர் தள்ளுபடி செய்தார்

சென்னை, ஜூலை 15—

நகரில் நடக்கும் தீ விபத்துக்கள் தொடர்பாக இருவரைக் கைதுசெய்திருப்பதாகப் போலீசு-இன்ஸ்பெக்டர் ஜெனரல் செய்தி வெளியிட்டிருப்பது குறித்து விவாதிக்கும் பொருட்டு அவையின் பிறநடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமெனறு, எதிர்க் கட்சித் தலைவர் திரு. பி. ஜி. கருத்திருமன் இன்று சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

"தற்போது இதுபற்றிப் போலீசு விசாரணை முடிவடையாத நிலையில் இருந்துவருகிறது. காரணங்கள் புலப்பட்டு யாரோ சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பலவித விசாரணைகள் இருக்கின்றன. போலீசு விசாரணை முடிவதற்குள் அதுபற்றி இங்கு விவாதிப்பது, விசாரணைக்குக் குந்தகம் விளைவிப்பதாகும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

அதன் பின், அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள், போலீசு நடவடிக்கைகள் தொடர்பான ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர முடியாது என்றும், ஏற்கனவே இப்படிப்பட்ட தீர்மானங்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதையொட்டியும், 'இது ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு உகந்ததல்ல' என்றும் கூறி, தீர்மானத்தைத் தள்ளுபடி செய்தார்.

ஜூலை 23

சேலம்-தூத்துக்குடி நாள்

தி.மு. கழகத்தின் சார்பில் சட்டமன்ற, நாடாளுமன்ற அனைத்துக் கட்சியினரும் கலந்துகொள்ளும்வகையில் நாடெங்கும் நடைபெறும் சேலம்–தூத்துக்குடி எழுச்சி நாள் பொதுக்கூட்டங்களில், கீழ்க்கண்ட இடங்களில் கழகச் சார்பில் கலந்துகொள்வோர் விவரம் தரப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா	...	சிவகங்கை
இரா. நெடுஞ்செழியன்	...	சேலம்
மு. கருணாநிதி	...	சென்னை
கே. ஏ. மதியழகன்	...	தஞ்சை
என். வி. நடராசன் எம்.எல்.சி.	...	காஞ்சிபுரம்
சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.	...	திண்டிவனம்
சத்தியவாணிமுத்து	...	திருச்சி
ஏ. கோவிந்தசாமி	...	கோவை
செ. மாதவன்	...	தூத்துக்குடி
சாதிக் பாட்சா	...	வேலூர்
எம். முத்துசாமி	...	மதுரை
ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்எல்ஏ.	...	கடலூர்
ப. உ. சண்முகம்	...	ஆரணி
காஞ்சி கல்யாணசுந்தரம்	...	ஈரோடு
அரங்கண்ணல் எம்.எல்.ஏ.	....	திருத்துறை பூண்டி
சி. சிட்டிபாபு எம்.பி.	...	திண்டுக்கல்
ஓ. பி. இராமன் எம்.எல்.ஏ	...	அரக்கோணம்
பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ.	...	திருவண்ணாமலை
சா.பெ. மலைச்சாமி எம்.எல்.ஏ	...	கள்ளக்குறிச்சி
கோ. விசுவநாதம் எம்.பி.	...	புதுக்கோட்டை
தில்லைவில்லாளன் }	...	திருவாரூர்
கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ }		
எல். கணேசன் எம்.எல்.ஏ.	...	குடந்தை
ஏ. பி. ஜனார்த்தனம்	...	குளித்தலை
வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.	....	சிவகாசி
காட்டூர் கோபால்	....	கோவில்பட்டி
அறிவுடைநம்பி	....	இராசிபுரம்
துரைமுருகன்	....	விருத்தாசலம்
இளமுருகு பொற்செல்வி	....	திருநெல்வேலி

[மற்ற ஊர்களின் விவரம் அடுத்து வெளியிடப்படும்]

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

தொடர்பு அதிகாரிகள் நியமனம்

சென்னை, ஜூலை 14—

1968 சனவரியில் சென்னையில் நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தொடர்பாக அலுவல்களைக் கவனிக்க இரு அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது.

கிராம முன்னேற்ற (கல்வி)த் துணை இயக்குநர் கே. வெங்கட சுப்பிரமணியம் தனி அதிகாரியாகவும், அவருக்கு உதவியாளராக கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர் கே. வி. சீனிவாசராகவனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர் வெளியேற்றப்பட்டார்

'ராக்கிங்' முறையில் ஈடுபட்டதாக நடவடிக்கை

மதுரை, ஜூலை 14—

கடந்த சில நாட்களாக மதுரை மருத்துவக் கல்லூரி மாணவிகளைக் கேலி ('ராக்கிங்') செய்ததாக ஒரு மாணவரை கல்லூரி விடுதியிலிருந்து உடனடியாக வெளியேறச் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

'அரசு முடிவு செய்யவில்லை'

காஞ்சி மாவட்டம் குறித்து அமைச்சர்

காஞ்சிபுரம், ஜூலை 14—

"காஞ்சிபுரம் தனி மாவட்டமாக்கப்படுவது பற்றி வருவாய்த் துறை வாரியம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறது"

என்று, உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் இங்கு பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

'அக்டோபர் இரண்டாம் நாள் காஞ்சிபுரம் தனி மாவட்டமாகும்' என்று அரசு முடிவு செய்திருப்பதாகக் கூறப்பட்ட செய்தியை அவர் மறுத்தார்.

நம்நாடு

ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 31 (15—7—67) சனி

எழுச்சி நாள்--
எதிர்ப்பு ஆர்ப்பாட்டமா?

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தைத் துவளவிட்டுவிடாமல், ஏற்கனவே திட்டமிட்டபடி நிறைவேற்றி வைக்கவேண்டும் என்றும், நீண்டநெடுங்காலமாகக் கோரப்பட்டுவரும் சேலம் உருக்காலை ஏற்பாட்டைக் காலந்தாழ்த்தாது மேற்கொள்ளவேண்டும் என்றும் இந்திய அரசை வற்புறுத்த, இத்திங்கள் 23-ம் நாளை 'எழுச்சி நாளா'கக் குறிப்பிட்டு, 'அந்த நாளில், பொதுக்கூட்டங்கள் வாயிலாகத் தமிழ் மக்கள் குரலெழுப்ப வேண்டும்' என்ற முடிவினை, தமிழக அரசு கொண்டிருக்கிறது.

இம்முடிவையொட்டி, தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற முன்னேற்றக் கழகம், மற்றத் தோழமை அரசியல் கட்சிகளுடன் தொடர்புகொண்டு, தமிழகமெங்கணும் 'எழுச்சி நாள்' கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறச் செய்ய ஆவன செய்து வருகிறது.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படவேண்டும் என்பதற்காகவும், மேலும் காலம்கடத்தாமல் சேலம் உருக்காலை நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், 'எழுச்சி நாள்' கருத்தை முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றக் கூட்டம் துவங்கப்பட்ட முதல் நாளே அறிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து, 'எழுச்சி நாள்' பொதுக்கூட்டங்களில் அரசியல் கட்சி வேற்றுமைக்கு இடமில்லை என்பதை விளக்கிக் காட்டி, 'அக்கூட்டங்களில் காங்கிரசுக் கட்சியும் பங்குகொள்ள வேண்டும்' என—'முதலமைச்சர்' என்ற முறையில்—சட்டமன்றத்திலும், வெளியிலும், பலமுறை உருக்கமாகவும் கனிவாகவும் அண்ணா அவர்கள் கோரிவந்திருக்கின்றார்.

ஆனால், முதலமைச்சர் அண்ணா அவர்களின் அந்த நியாயமான கோரிக்கையை, காங்கிரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. 'எழுச்சி நாள்' கூட்டங்களில் கலந்துகொள்ளும்படி காங்கிரசுக் கட்சியைக் கோர முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு உரிமை இருப்பதுபோலவே, அக்கோரிக்கையை மறுக்கவும் காங்கிரசுக கட்சிக்கு உரிமை உண்டு.

"முதலமைச்சரின் இதயபூர்வமான கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதே காங்கிரசுக் கட்சி" என்பதற்காக, அக்கட்சியின்மீது கோபப்படுவதற்குக் காரணமில்லை. ஆனால், தமிழக மக்கள் அனைவருக்கும் பெருங்கவலை தந்துகொண்டிருக்கின்ற திட்டங்களை நிறைவேற்றிவைக்க இந்திய அரசினைக் கோரும் மற்ற அரசியல் கட்சிகளுடன் முயற்சிக்கக் காங்கிரசுக் கட்சி உடன்படாமைக்கு, தமிழ் மக்கள் வருந்தத்தான் வருந்துவர்.

'எழுச்சி நாள்' பொதுக்கூட்டங்களில் மற்ற அரசியல் கட்சிகளைப்போலத் தானும் கலந்துகொள்ள விரும்பாதது எப்படியோ இருக்கட்டும்; கழகம் உட்பட மற்ற அரசியல் கட்சிகள் அனைத்தும் கூட்டாகப் பங்குகொள்ளக்கூடிய 'எழுச்சி நாள்' கூட்டங்களுக்கு எதிராக 'ஆர்ப்பாட்டம்' செய்யலாமா எனச் சிந்திக்கின்ற அளவுக்கும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலர் துணிந்திருப்பதுதான் வேதனை தரக்கூடிய வியப்பாகும்.

'எழுச்சி நாள்' கூட்டங்களுக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலரின் 'மூளை' எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் குறித்துச் சிந்திப்பதில முனைந்திருக்கிறது—என்ற கருத்தை, நாமாகக் கற்பனை செய்து கூறவில்லை. 'எழுச்சி நாளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டாம்' என, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர், சொந்தக் கட்சியினரைக் கேட்டுக்கொண்டிருப்பதைக் கொண்டே, 'ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும்' என்ற முனைப்பில் சில காங்கிரசுக் கட்சியினராவது இருந்திருக்கின்றனர் என்பது உறுதியாகிறது.

'எழுச்சி நாள்' கூட்டங்களை எதிர்த்து 'ஆர்ப்பாட்டம்' செய்ய வேண்டும் என்ற கருத்தைக் கொண்ட காங்கிரசுக் கட்சியினர் எண்ணிக்கை கணிசமானதா அல்லது குறைவானதா என்பது கேள்விக் குறியாகும். கட்சி நிர்வாகப் பொறுப்பிலிருக்கின்ற சிலருக்காவது, 'எதிர்ப்பு ஆர்ப்பாட்ட'க் கருத்து இல்லாதிருந்திருக்கும்பட்சத்தில், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர், 'ஆர்ப்பாட்டம் வேண்டாம்' எனக் கூறியிருக்கவே மாட்டார். இவ்வாறு அவர் கூறியிருப்பதைக் கொண்டு, நிர்வாகப் பொறுப்பிலிருக்கின்ற சில காங்கிரசுக் கட்சியினரிடம், 'எதிர்ப்பு ஆர்ப்பாட்ட' நினைப்பு இருந்திருக்கிறது என்ற உண்மை உறுதியாகிறது.

'எழுச்சி நாளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் கூடாது' என வெளிப்படையாகக் கூறிய அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர், ஆங்காங்கே உள்ள காங்கிரசு அமைப்புக்களுக்கு, 'ஆர்ப்பாட்டம் கூடாது' எனச் சுற்றறிக்கை அனுப்பும்படியும், தமிழகக் காங்கிரசுத் தலைவரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார். இத்துடன், தம்மை நேரில் கேட்ட காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலரிடம், எழுச்சி நாளன்று 'தூங்குங்கள்' என்றும் காமராசர் அவர்கள், அறிவுரை கூறியிருக்கின்றார்.

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் கோரியிருக்கின்றபடிதான், காங்கிரசுக் கட்சியினர் அனைவரும் செயல்படுவர் என்று எவரும் எதிர்பார்ப்பர். நமக்கும் அதில் நம்பிக்கை உண்டு.

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் வேண்டிக்கொண்டிருப்பதற்கு மாறாக, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சில பலராவது, 'எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்' ஈடுபடக்கூடும் என்பது நடைபெறக் கூடியதே. அவ்வாறு நடைபெறுது—நடைபெறக்கூடாது என்பதுதான் நமது நம்பிக்கையும் விழைவும்.

இத்துறையில், காங்கிரசுக் கட்சியினரைக் குறித்து நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கையும் விழைவும் மட்டுமே பாதுகாப்பைத் தந்துவிடாது. 'எழுச்சி நாள்' கூட்டங்களில் தக்க பாதுகாப்பும் செய்யப்பட வேண்டும். இந்த வகையில் முன்னெச்சரிக்கையாகவும், விழிப்பாகவும், தேவைப்படக்கூடிய பாதுகாப்பு முறைகளை அரசு செய்து முடிக்கவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

—கா. க.

அருளுணர்வுடன் பொருளுதவி புரிவீர்

தீய சக்திகளின் திட்டமிட்ட சதியைத் தீரத்துடன் எதிர்த்து நிற்போம்

நலிந்த மக்களின் இடுக்கண் களைய உற்ற துணைவர்களாக இருப்போம்!

நாட்டு மக்களுக்கு சென்னைத் துயர் துடைப்புக் குழுத் தலைவர் சத்தியவாணிமுத்து வேண்டுகோள்

சென்னை, ஜூலை 14—

"சமுதாய உணர்வும், பிறர் துன்பத்தைத் தனது துன்பமாக எண்ணி உதவிசெய்யும் பக்குவமும் இல்லாவிட்டால் நம்முடைய முன்னேற்றம்—பண்பாட்டு உயர்வு—நாகரிகச் சிறப்பு எல்லாம் வெறும் ஏட்டில் மணக்கும் எழுத்துக்களாக இருக்குமே தவிர, வாழ்க்கையில் உதவும் அறநெறிகளாகவோ, மக்களை உயர்த்தி நிறுத்தும் உன்னதக் குறிக்கோள்களாகவோ இருக்கமாட்டா!

"பற்றியெரிந்த குடிசைகள் எங்கோ ஒரு பக்கத்தில் இருந்திருக்கலாம், ஆனால் அது, 'நம்முடைய பக்கத்து வீட்டுக் குடிசை; இன்னும் சொல்லப்போனால் நம்முடைய குடிசை' என்ற அருளுணர்வு நமக்கு வரவேண்டும் என்று தமிழக மக்கள் அனைவரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கொள்ளி, குடிசையில் வைக்கப்படவில்லை; ஏழைப் பாட்டாளி மக்களின் அடிவயிற்றில்தான் வைக்கப்பட்டுள்ளது"

இவ்வாறு, தாழ்த்தப்பட்டோர்நல—செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள்—'சென்னைத் தீ விபத்து நிவாரண நிதிக் குழுத் தலைவர் என்ற முறையில்—தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பணிகள் குறித்தும், நிவாரண நிதியைத் தாராளமாக அளிக்குமாறு பொதுமக்களை வேண்டிக் கேட்டுக்கொண்டும் வானொலியில் ஆற்றிய உரையில் சுட்டிக்காட்டினர். அவர் ஆற்றிய உரையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீரோடு வேதனைத் துயரில் மூழ்கியிருக்கும் ஏழை எளியவர்கள் சார்பில், தமிழக மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நெஞ்சுருக்கும் நிகழ்ச்சிகள் நல்லோர் உள்ளத்தை உலுக்கியிருக்கின்றன. ஒரு தீங்கும் அறியாத பாமர மக்களுக்கு அநீதியும் அக்கிரமமும் இழைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கொடுமையை நினைத்துப் பார்த்தால் கல்லும்கசிந்துருகும்.

உழைப்பையே பிழைப்பாகக் கொண்ட ஏழை மக்கள் அன்றாட வயிற்றுப் பாட்டுக்கே அயராது உழைத்து—வெயிலென்றும் மழையென்றும் பாராது நாளெல்லாம் கடுமையாகப் பாடுபட்டு—இரவில் ஒதுங்கவும் ஒண்டியிருக்கவும் தங்கள் குடில் நோக்கிவரும் பாட்டாளிகள், தொழிலாளர்கள், ஏழைத் தாழ்த்தப்பட்ட பெருங்குடியினர்—அவர்களது குடிசைகளுக்குத் தீய சக்திகள் தீயிட்டிருக்கின்றன!

தென் சென்னையில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்து, அனைவரையும் திடுக்கிட வைத்திருக்கிறது! திடீர்த் திடீர் என்று ஓலைக் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன.

'இந்தப் பகுதியில் எரியப் போகிறது' என்று மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தும் எரியூட்டிருக்கிறார்கள்.

பெற்றெடுத்த குழந்தை குட்டிகளோடும், பெட்டி படுக்கைகளோடும் மக்கள் பதறித் துடித்து வெளியே வந்து—தங்கள் குடிசைகள் பற்றியெரிவதைப் பொங்கி வழியும் கண்ணீரோடு பார்த்து—செய்வதறியாது திகைத்து நின்றிருக்கிறார்கள்!

'இப்படியும் ஒரு கொடுமையா?' என்று, இரக்க உணர்வுடையார் நெஞ்சழிந்து கேட்கிறார்கள்!

அரசும்—போலீசும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்ட தன்பேரில் இப்பொழுதுநிலைமை சீர்திருந்தியுள்ளது.

பற்றியெரிந்த தீயை அடக்குவதில் தீயணைப்புப் படையினரும், போலீசாரும், தங்கள் உயிரைத் துரும்பாக மதித்துப் பாடுபட்டிருக்கிறார்கள்.

இந்த நாசத்திற்குக் காரணமான தீய சக்திகளைக் கண்டுபிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் கொண்டுவந்து நிறுத்த விநாடியும் அயராது போலீசு அதிகாரிகள் முழுமூச்சுடன் பணியாற்றி வருகிறார்கள்.

அவர்களது அருமுயற்சியால் தீயசக்திகள் ஒடுக்கப்பட்டு, அநீதி இழைத்தோர் அதற்கான தண்டனையைப் பெறுவர் என்பது உறுதி.

இந்தத் தருணத்தில் நமது கடமையினையும் பொறுப்பினையும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு வலியுறுத்தியுள்ளார்கள். அதைக் கருத்திற்கொண்டு மக்கள் அரசுடன் ஒத்துழைக்க நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பீதியால் பாதிக்கப்பட்ட மக்கள், தங்கள் சொத்தையும் நலனையும் இழந்து இன்று நடுத்தெருவில் நிற்கிறார்கள்.

அச்சமும், 'நாளைக்கு என்ன செய்வோம்?' என்ற கழிவிரக்கமும் அவர்களை அலைக்கழிக்கின்றன.

குழந்தை குட்டிகளுடன் நடுத்தெருவில் நின்று அவர்கள் நம்முடைய ஆறுதல் கரத்திற்காக அன்பான — அரவணைப்புக்காக ஏங்கித் தவிக்கின்றனர்;

அவர்தம் துயர்துடைத்திட மக்கள் ஒருமனப்பட்டு முன்வர வேண்டும்.

'இது இன்றைய நமது உடனடி உதவி—காலத்தால் செய்யும் நன்றி' என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த விபத்து இயற்கை உற்பாதத்தால் விளைந்தது அல்ல; அப்படியிருந்தால், நாம் இயற்கையை நொந்திருக்கலாம்.

மக்களின் கவனிப்பின்மையால் ஏற்பட்டது அல்ல; அப்படியிருந்தால், 'இனி நாம் விழிப்போடு இருப்போம்' என்று மனம் தேறியிருக்கலாம்.

சில விஷமிகள்—சமுதாயத்தின் தீய சக்திகள் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்தத் தீங்கை விளைவித்திருக்கின்றன.

இதைத் தாங்கக்கூடிய சக்தி மக்களுக்கு உண்டா — அரசுக்கு இருக்கிறதா என்று அறைகூவல் இன்று எழுந்திருக்கிறது; 'உண்டு' என்பதை நாம்,'சமூகக் காளான்'களுக்கு உணர்த்தவும், ஒற்றுமைப்பட்டு நம்மை உயர்த்திக் கொள்ளவும் இது ஓர் அருமையான வாய்ப்பு.

இந்த அறைகூவலை ஏற்று நம்முடை உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் நாட்டுப்பற்றையும், அருளுணர்வையும் நிலைநாட்டுவோம்.

கையற்றநிலையில் கண்ணீர்விட்டு நிற்கும் மக்களுக்கு உதவுவதை அரசு தன் முழுமுதற் கடமையாகக்கொண்டுள்ளது; உதவித் தொகை அவர்களுக்கு எளிதில் கிடைக்க விரைந்து செயலாற்றுகிறது.

வீட்டையும், தாங்கள் போற்றிப் பாதுகாத்துவந்த உடைமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு உதவித் தொகையை இப்பொழுது அரசு ரூ. 80 ஆக உயர்த்தியிருக்கிறது. இதைத் தவிர, மாநகராட்சி அவர்களுக்குக் குடிசை ஒன்றுக்கு ரூ. 25 உதவித் தொகை வழங்குகிறது.

இந்த உதவிகள் மட்டும்போதாது, ஒரு கை தட்டி ஓசை எழும்பாததுபோல், அரசின் முயற்சியும் மாநகராட்சியின் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டும் போதாது; பொதுத் தொண்டில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள சேவை நிறுவனங்களும், அருளுள்ளம் கொண்ட மக்களும் முன்வந்து இன்னல்படும் ஏழை மக்களின் அல்லலைப் போக்கவேண்டும்.

'தீ விபத்துத் துயர்துடைப்புச் சீரமைப்புக் குழு' என்று—அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளைக்கொண்ட அமைப்பு ஒன்று முதலமைச்சரின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், கல்வி நிலையங்கள், அறமன்றங்கள், சமுதாயத் தொண்டர்கள் ஆகிய அனைத்துப் பகுதியினரும் நிதிக்கு வாரி வழங்கி வருகின்றனர்.

இதில், 'நம்முடைய பங்கும் சேர வேண்டும்' என்ற எழுச்சி அனைவா நெஞ்சிலும் — குறிப்பாக மாதரிடம் பொங்கியெழ வேண்டும் என்று விழைகிறேன்.

இப்படிப்பட்ட இன்னல்—எதிர்பாராத விபத்து—நம்முடைய ஆற்றலை -- பக்குவத்தை -- பண்பாட்டைச் சோதனை செய்து பார்க்கும் அறைகூவலாகும்.

எந்த அளவுக்கு உறுதி குலையாமல் கட்டுப்பாடாகக் கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோமோ, அந்த அளவிற்குத்தான் இதில் வெற்றி பெற்று மீள முடியும். அதனால், யாரும் பீதிக்கு—மனக் கலவரத்திற்கு—குழப்பத்திற்கு ஆளாக வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கயவர்களைக் கைது செய்வதில் போலீசாருக்கு உற்ற நண்பர்களாய் உதவுங்கள்! அதே நேரத்தில், கிலிக்கு அடிமையாகிக் குழப்பத்தைத் தோற்றுவித்து விடாதீர்கள்!

திட்டமிட்டுச் செய்யப்படும் சதி—எனவே நாம், தீரத்துடன் நின்று சமாளிக்க வேண்டும்!

'இது நமக்கு ஓர் அறைகூவல்' என்று சொன்னேன்; இந்த அறைகூவலை நாம் எப்படி வெற்றி கொள்வது?—நம்முடைய உதவியைத் தாராளமாகவும் மனமுவந்தும் அளிப்பதன் மூலம்தான்!

(4-ம் பக்கம் பார்க்க)

விவாத முறையில் புதிய மாற்றம்

உருவான பலன் காண அண்ணா யோசனை

சட்டமன்றத்தில் நடக்கும் விவாதங்களில் உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவிக்கும் குறைபாடுகள்—யோசனைகள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அமைச்சர்கள் பதிலளிக்கும் வகையில் சட்டமன்ற மானியக் கோரிக்கை விவாத முறையையே தக்க முறையில் மாற்றியமைக்கலாம் என்ற யோசனையை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

சட்டமன்றத்தில் மாவட்ட நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் அண்ணா அவர்கள் இந்த யோசனையைக் கூறி, எல்லாக் கட்சியினரின் கருத்துக்களையும் ஒத்துழைப்பையும் கேட்டார்.

அண்ணா இதுபற்றிக் குறிப்பிட்டதாவது:—

"மாவட்ட நிர்வாகத்திற்கான மானியத்தின்மீது பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தபோது, நாம் இவைகளை நல்ல முறையிலே மாற்றியமைத்துச் செய்யலாமா என்று எனக்குத் தோன்றிற்று.

பொதுவாக உறுப்பினர்கள், தங்கள் தங்கள் அரசியல் கட்சிகளை அடிப்படையாகக்கொண்டு பேசினால், உடனடியாகப் பதிலளித்துவிடலாம். அவர்கள், 'நிர்வாகத்தில் சில திருத்தங்கள் செய்யவேண்டும்; சில அமைப்புக்களை மாற்றியமைத்து உருவாக்க வேண்டும்; சில குறிப்பிட்ட இடத்தில் உள்ள சீர்கேடுகளைத் திருத்தவேண்டும்' என்று கூறினார்கள்.

இப்படிப்பட்ட கருத்துக்களைக் கூறுகின்றபோது, அமைச்சர்கள் அதற்கு உடனுக்குடன் பதிலளிப்பதைவிட, உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வழிசெய்து கொடுத்துவிட்டு, மறுநாள் அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அதற்குத் தொடர்புடைய அதிகாரிகளிடத்தில் கலந்துபேசி—'உறுப்பினர்கள் இன்னின்ன யோசனைகளை எடுத்துச் சொன்னார்கள்' என்று கூறி—மறுநாள் அதற்குப் பதிலளித்தால் இன்னும் நல்ல முறையிலே இந்த விவாதத்தின் பலன் கிடைக்குமென்ற எண்ணம், பல உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது எனக்குத் தோன்றியது.

நண்பர் திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் பேசியபோது 'கலெக்டர் தனக்குத்தானே ஒரு நோட்டீசு கொடுத்துக் கொண்டார்' என்று குறிப்பிட்டார்.

அதுபற்றி உடனடியாக நான் பதில் சொல்வதென்றால், 'அது வேடிக்கையாகச் சொல்லப்பட்டது; உண்மை அப்படி அல்ல' என்று 'சர்க்கார் பாணி'யில்தான் பதில் சொல்லவேண்டியிருக்கும்.

'அந்தக் கேள்விக்கு இன்னொரு நாள் அமைச்சர் பதில் சொல்லலாம்' என்ற முறை இருக்குமானால், நல்ல முறையிலே தகவல்களை அறிந்து பதில் சொல்ல முடியும். அதற்கு அதிகமான நாட்களில் சட்டமன்றங்களை நடத்தவேண்டி வரலாம்.

முதலிலே, பொது வரவு-செலவுத் திட்ட விவாதம் முடிந்தவுடன் இந்த மானியக் கோரிக்கைகளைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் முடித்துவிடவேண்டும்.

நிதி பெறுவதற்கான நாட்களை நாம் குறைத்தாக வேண்டும். அதை விரைவுபடுத்திக் கொண்டு—இரண்டு நாட்களில் வாக்கெடுப்பு நடத்தி—பொதுவாக, 'கட்சிக்கு ஒருவர்' என்று மட்டும் பேசி மான்யக் கோரிக்கைகளையெல்லாம் முடித்துக் கொள்ளவேண்டும்.

அதற்குப் பிறகு, இந்தத் தலைப்புக்களின்மீது பல்வேறு நல்ல கருத்துக்களை உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லி, அதை அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் கேட்டு, மறுநாள் அந்தத் துறையிலே தகவல்களைச் சேகரித்துப் பதிலளித்தால் இன்னும் இந்த விவாதம் நல்லமுறையிலே நடைபெறும் என்று கருதுகிறேன்.

இல்லையென்றால், இப்போது மாவட்ட வளர்ச்சிக் கவுன்சிலைப் பற்றிச் சொன்னதுபோல், அவர்கள் சில கருத்துக்களைச்சொல்லி—அதிகாரத்தில் உள்ளவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி—'மணி ஒன்றாகப் போகிறது; எப்பொழுது முடிக்கலாம்'என்று எல்லோரும் ஆவலுடன் இருக்கின்ற நிலையைப்போன்று—நாமும் அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கலாம்.

முக்கியமான பிரச்சினைகளில் ஒரு மாற்றம் ஏதாவது ஏற்பட வேண்டுமானால் அது, இவையாகத்தான் இருக்குமென்று இன்றையத்தினம்உணர்ந்தேன்.

ஆகவே, பல துறைகளிலுமுள்ள விதிமுறைகளையும் புகுத்தி நாம் எல்லாம் ஒழுகவேண்டுமென்பதில் சட்டமன்றத் தலைவர் அவர்களும் கவனித்து, அதைப்பற்றியும் பல நல்ல திருத்தங்களை ஏற்படுத்தித் தருவார்கள் என்று நம்புகிறேன்.

கட்சித் தலைவர்கள் எல்லாம் அதைப்பற்றி யோசித்து, நம்முடைய வரவு—செலவுத் திட்ட விவாத நேரத்தை மேலும் எப்படிப் பயனுள்ளதாக்கலாம் என்று யோசிக்கவேண்டும் என்று கருதுகிறேன்."

நில உச்சவரம்புச் சட்டத் திருத்தம்

'முன்கூட்டி விவாதிப்பது நல்லதல்ல'

சட்டமன்றத்தில் அண்ணா அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 13—

"நில உச்சவரம்பு கொண்டுவந்ததன் மூலம் மிச்சப்பட்டநிலத்தில் 16,546 ஏக்கர் விவசாயிகட்கு இவ்வாண்டு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது"

என்று, இன்று சட்டமன்றத்தில் உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

1962 மே திங்களில் கொண்டுவரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம், 6 4-60 முதல் செயல்படுத்தப்படும் வகையில் நிறைவேற்றப்பட்டது என்றும், 1—3—67-ல் மிச்சப்பட்ட நிலம் 24,351 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

"நில உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருப்பதால், அதிக அளவு மிச்சப்படாததால், 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று திருத்தியமைக்கப்படுமா? கோயில் மடம் ஆகியவற்றிற்குச் சட்டத்திலேயே விலக்களிக்கப்பட்டுள்ளதா?" என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்த நேரத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறுக்கிட்டு,

"நில உச்சவரம்புச் சட்டத்தை எப்படி எப்படியெல்லாம் திருத்தவேண்டும் என்று நாம் இப்போது பேசிக்கொண்டிருப்பது, பழைய கதையைப்போல-பலர் தப்பித்துக்கொள்ள வழியமைப்பதாகவே அமையும்" என்றார்.

அனுமதியின்றி மாநிலங்கள் பெற்ற அதிகப் பற்று!

ஆறு மாநில அரசுகட்கு ரிசர்வ் பாங்கி நோட்டீசு

1967 மார்ச் 31-ஆம் நாள் வரை ரிசர்வ் பாங்கியிலிருந்து அனுமதியின்றி அதிகப் பற்றாகப் பணம் பெற்றுள்ள ஆறு மாநில அரசுகளுக்கு, இந்த அதிகப் பற்றுத் தொகையைத் திருப்பிக் கொடுத்துக் கணக்கை நேர் செய்யுமாறு ரிசர்வ் பாங்கி முன்னறிவிப்புக் கொடுத்துள்ளது.

இந்த ஆறு மாநிலங்களில், 4 மாநிலங்களுக்கு மத்திய அரசு ரூ. 55 கோடி சிறப்பு உதவியாக அளிக்க இருக்கிறது. அந்த மாநிலங்கள் பெற்றுள்ள அதிகப் பற்றுத் தொகையைத் தீர்த்துக்கொள்வதற்கென்றே இத்தொகை அளிக்கப்படுகிறது.

ரூ. 5 கோடி நிலுவை

திருவனந்தபுரம், ஜூலை 12—

கேரள அரசுக்கு வருவாய்த் துறைமூலம் கடந்த ஏப்ரல் 30-ம் நாள்வரை ரூ. 5.5 கோடி நிலுவை இருப்பதாக, வருவாய்த் துறை அமைச்சர் கௌரி தாமஸ் சட்டமன்றத்தில் கூறினார்.

38 பேர் ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் கொடுக்கவேண்டியிருப்பதாகவும், வருமான வரி ரூ. 2 கோடி நிலுவை இருப்பதாகவும் அவர் கூறினார்.

தாயகம் திரும்பும் இலங்கை இந்தியர்

மறுவாழ்வு அளிக்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 13—

இந்தியா—இலங்கை ஒப்பந்தப்படி இந்திய வம்சா வழியினர் 5,25,000 பேர், 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவுக்கு அனுப்பப்படுவர். இந்த ஒப்பந்தம், இன்னும் சில மாதங்களில் நடைமுறைக்கு வரும்.

இந்த ஒப்பந்தத்தினால் இந்தியா திரும்பும் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க இந்திய அரசு திட்டமொன்று தயாரித்துள்ளதாம்.

இந்தியாதிரும்பும் இந்திய வம்சா வழியினருக்கு வேலை கிடைப்பதற்கு உதவி செய்வதற்காக சென்னையிலும், விசாகப்பட்டினத்திலும் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்கவும், இந்தியா திரும்பும் மக்களின் சில குறிப்பிட்ட தேவைகளைக் கவனிக்கவும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு 'நாடு திரும்பும்' அட்டை கொடுக்கப்படும்.

அந்த அட்டையில், அவர்கள் இந்தியா திரும்பியவுடன் பெற வேண்டிய நிவாரணம்—அதாவது கடன் வசதி, மனைக்கட்டு, வீடு அல்லது கடை, கல்வி அல்லது தொழிற்பயிற்சி வசதி, வேலை வசதிகள் முதலியவை பதிவு செய்யப்படும்.

இலஞ்ச ஊழல் குற்றம்

அதிகாரிகளுக்குத் தண்டனை

புதுடில்லி, ஜூலை 13—

இவ்வாண்டு மே திங்களில் 17 வழக்குகளில் கெசட் பதிவு அதிகாரிகள் மூவருக்கும், 12 அரசு ஊழியர்களுக்கும், வேறு ஏழு பேருக்கும் இலஞ்ச ஊழல் குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்டது.

மொத்தம் ரூ. 14,000-க்கு அபராதங்களும், சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டன.

பல்கிப் பெருகிவரும் அரசு அச்சகப் பணிகள்

தொழிலாளர் நலனுக்கான புதிய வசதிகள்

அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, ஜூலை 13—

சட்டமன்றத்தில் எழுதுபொருள்—அச்சுத் துறைக்கு ரூ. 2,27,09,900-க்கான மானியக் கோரிக்கை கொண்டுவந்து செய்தித்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய உரையாவது:—

"அரசின் பணிகள் பல்கிப் பெருகியுள்ளதன் விளைவாகவும், இம்மாநிலத்தில் தமிழ் ஆட்சி மொழியாக நிலவிவருவதாலும், அரசு அச்சகப் பணிகள் மிக விரிவடைந்துள்ளன.

இவ்வாறு பெருகி வளர்ந்துள்ள பொறுப்புக்களைச் சமாளிப்பதற்காக அச்சக அமைப்பினை விரிவுபடுத்துவதும், வேண்டிய அச்சகப் பொறிகளை அமைப்பதும் இன்றியமையாததாயிற்று.

அரசு அச்சகத்தில் சற்றேறக் குறைய 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

எனவே, இரண்டு முறை வேலை (Shift) போட்டு வேலை செய்தபோதிலும், பெருமளவு நிர்வாகத் திறனை உறுதிப்படுத்துவது கடினமாய் உள்ளது.

அரசு அச்சகங்களைப் பெருக்க வேண்டும்; அதே நேரத்தில் அவற்றைப் பரவலாக அமைக்கவேண்டும்—என்ற இரண்டு நோக்கங்களையும் எய்தும்வகையில், தக்க இடங்களில் வட்டார அச்சகங்களைத் தொடங்கவேண்டும் என்பதை அரசு, கொள்கையளவில் ஒப்புக்கொண்டது.

இத்திட்டத்தின்படி, முறைப்படுத்தப்பட்ட படிவங்கள் போன்று அதிகம் அச்சடிக்க வேண்டிய வேலைகளுக்கு ஈடு கொடுப்பதற்காகத் தன்னிறைவு உள்ள திறமை வாய்ந்த அமைப்பாகச் செயல்படுவதற்காகவும், அக்கம் பக்கத்திலுள்ள மாவட்டங்களின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் வட்டார அச்சகங்களை வளர்க்கக் கருதியுள்ளது.

இத்தகைய வட்டார அச்சகம் முதன் முதலாக திருச்சிராப்பள்ளியில் 1965 மார்ச் 20-ல் தொடங்கப்பட்டது; அதன் பின்னர் சேலத்தில் 1966 மார்ச் 19-லும், விருத்தாசலத்தில் 1966 ஆகஸ்டு 17-லும் வட்டார அச்சகங்கள் நிறுவப்பட்டன.

புதுக்கோட்டையிலும், சென்னை மத்திய சிறைச்சாலையிலும், உயர் நீதிமன்றக் கட்டிடங்களிலும் உள்ள கிளை அச்சகங்களில் வேலை அளவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வந்துள்ளது.

அச்சகங்களைப் பரவலாக ஏற்படுத்திவிட்டால் மட்டும் அச்சகத்தின் திறன் வளர்ந்து விடும் என்றோ, இதில் நடைபெறும் பணி பெருகிவிடும் என்றோ கூறிவிட முடியாது.

தேய்ந்துபோன பழைய அச்சகப் பொறிகளுக்குப் பதிலாக நவீன அச்சகப் பொறிகளை அமைத்தாக வேண்டும்; வேண்டிய பல கருவிகளை வாங்கியாக வேண்டும்.

1966—67-ம் ஆண்டில் ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள பொறிகள் விலைக்கு வாங்கப்பட்டு அரசுத் தலைமை அச்சகத்திலும் கிளை அச்சகங்களிலும் நிறுவப்பட்டன.

1967 பிப்ரவரித் திங்களில் நடந்த பொதுத் தேர்தல் குறித்துப் பெரும் அளவு அச்சு வேலைகளை உரிய காலத்தில் அரசு அச்சகம் வெற்றிகரமாகச் செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்க மற்றொரு கூறாகும்.

'பாடப் புத்தகங்களை அரசே வெளியிடுவது' என்ற கொள்கை காரணமாக, அரசு அச்சகத்தில் வேலைப் பளு மிகவும் அதிகரித்து விட்டது. எனவே, பாடப் புத்தகங்களை அரசு அச்சிடுவதற்கு என்று தனிப்பட்ட கிளை அச்சகம் ஒன்று மவுண்ட் சாலையில் நிறுவப்பட்டுள்ளது.

அரசு அச்சகத்தில் 1963—64-ம் ஆண்டு அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 57.75 இலட்சமாக இருக்க, 1965—66-ம் ஆண்டில் அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 73.27 இலட்சமாக உயர்ந்தது.

அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு வேலை நிலைமைகள் வாய்ப்பாக அமையவேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது.

அச்சகத் தொழிலாளர்கள் முன்னரே அனுபவித்துவரும் சில வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

நச்சுக் காற்றினால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் கால் லிட்டர் பாலும், பல விட்டமின் அடங்கிய மாத்திரைகளும் கொடுக்கப்படுகின்றன.

பன்ரொட்டியும், தேநீரும் இலவசமாக வழங்குவது—திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள வட்டார அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

தமிழக அரசு அச்சுத் தொழிலாளர் நல நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

தகுதியான தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஈமக்கடன் செலவிற்காக ரூ. 50 வரையில் கருணைக்கொடை வழங்கவும், எழுதுபொருள்—அச்சுத்துறை நெறியாளர் அதிகாரம் பெற்றுள்ளார்.

உலோகத்தை உருக்கும் பிரிவுகளிலும், தொடர்பான ஏனைய பிரிவுகளிலும்பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் காப்பு முகமூடிகளும், கெட்டித் தோல் காலணிகளும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு அச்சகத் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு குடும்ப ஓய்வு ஊதிய விதிகளின் நலன்களை 1960 ஜூலை 1-ந்தேதி முதற்கொண்டு விரிவுபடுத்தியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அரசு அச்சுத் துறையின் எழுதுபொருள் பிரிவு பல்வேறு அச்சுத் துறையின் தேவைகளையும், பல்கலைக் கழகம் போன்ற ஓரளவு அரசாங்கச் சார்புள்ள சில நிறுவனங்களின் தேவைகளையும் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

இப்பிரிவிலிருந்து 1963—64-ல் ரூ. 91.47 இலட்சம் மதிப்புள்ள எழுதுபொருள்கள் வழங்கப்பட்டிருக்க, 1965—66-ல் ரூ. 109.53 இலட்சம் மதிப்புள்ள எழுதுபொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

எழுதுபொருள் — அச்சுத்துறையின் வேலை, நிர்வாக—நிறுவன அன்றாடப் பணியுடன் நீக்கமறப் பின்னிப் பிணைந்துள்ளது. அச்சுத் தொழிலாளர்களின் உளமார்ந்த கூட்டுறவுடன் இந்தத் துறை அனைவருக்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் திறமையுடன் பணியாற்றும் என்பதில் எனக்கு ஐயப்பாடு எதுவும் இல்லை."

கள்ள மார்க்கெட் ‘கழுகு’களுக்குக் கடுஞ்சிறை!

சட்டத்தைத் திருத்த அரசு ஆலோசனை

சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் நடவடிக்கை

சென்னை, ஜூலை 14—

உணவுப் பொருள்களைக் கள்ளச்சந்தையில் விற்பனை செய்பவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருப்பதாகவும், அவ்வப்போது அரிசி முதலிய இன்றியமையாப் பண்டங்களின் விலை ஏறுதபடி கண்காணித்து வருவதாகவும், விழிப்பாகச் செயலாற்றிவருவதாகவும் உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், இன்று சட்டமன்றத்தில், திரு. வி.கே. கோதண்டராமனின் கேள்விக்குப் பதிலளித்தார்.

கே. விநயகம் :—“இதுவரை கள்ளச்சந்தையில் ஈடுபட்டதாக எத்தனைபேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?”

பதில் :—“அதற்கான தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.”

ஈ. ஆர். கிருஷ்ணன் :—“ ‘கள்ள மார்க்கெட் கழுகுகளைத் தூக்கிலிட வேண்டும்’ என்று காலஞ்சென்ற தலைமையமைச்சர் நேரு கூறினரே — அதைப்போல் தூக்கிலிடாவிட்டாலும், அவர்களுக்குக் கடுஞ்சிறைத் தண்டனையாவது கொடுக்க இந்த அரசு முன்வருமா ?”

பதில் :—“கடுமையான சிறைத் தண்டனை கொடுப்பதோடு மட்டுமன்றி, கள்ளக் கடத்தலுக்குப் பயன்படுத்தும் லாரிகளையும் பறிமுதல் செய்வது பற்றி சட்டத்தைத் திருத்த ஆலோசனை நடைபெற்று வருகிறது. அத்துடன், கள்ள மார்க்கெட்காரர்களிடம் உள்ள சொத்தைப் பறிமுதல் செய்யவும் உரிய சட்டமியற்றுமாறு மத்திய அரசிடம் இந்த அரசு வற்புறுத்தி வருகிறது.”

மா. இராசாங்கம் :—“கள்ளச்சந்தையில் ஈடுபடுபவர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பதால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது வெளியே தெரிவதில்லை. அவர்களை விலங்கிட்டு ஊர் மக்களறிய வீதியில்இழுத்து வர ஏற்பாடு செய்யப்படுமா ?”

பதில் :— “வழக்குமன்றத்திலேயே முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு தக்க தண்டனை வழங்கப்படும்.”

நிதி திரட்டும் நிகழ்ச்சியில் எம். ஜி. ஆர்.

சென்னை, ஜூலை 14—

அண்மையில் சென்னை நகரில் ஏற்பட்ட தொடர் தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகப் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., நேற்று பொதுமக்களிடம் நிதி திரட்டுவதற்கான நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

நிகழ்ச்சி, வண்ணை தியாகராயர் கல்லூரி முன்பிருந்து காலை 9 மணிக்குத் துவங்கியது.

டிரக் வண்டி ஒன்றில் நின்றுகொண்டு எம்.ஜி.ஆர். நிதி வசூல் செய்தார்.

ஏராளமான பொதுமக்களும் கழகத் தோழர்களும் தாய்மார்களும் நிதியளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், துணை மேயர் கிருட்டினமூர்த்தி, கோ. செங்குட்டுவன், கே. கோவிந்தசாமி எம்.சி., க. அறிவழகன் எம்.ஏ., தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

மறுப்பதற்கு ஆதாரமில்லை!

மா. பா. சாரதி :—“பீடித் தொழில் முதலாளிகளுக்குப் பணிந்துதான் முந்திய அரசு, பீடித் தொழிலாளர் சட்டத்தை அமுல்படுத்தாமல் இருந்து வந்தது என்பது உண்மையா ?”

சட்ட அமைச்சர் மாதவன் :— “அப்படிச் சொல்லப்படுவதை மறுப்பதற்கு என்னிடம் ஆதாரம் ஒன்றும் இல்லை.”

—சட்டமன்றத்தில் : 14-7-67

கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது

டோக்கியோ, ஜூலை 14—

ரூ. 525 இலட்சம் மதிப்புள்ள ஜப்பானிய கடன் ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா இன்று கையெழுத்திட்டது.

15 ஆண்டுகளில் இந்தக் கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்; யூரியா உரங்கள் வாங்குவதற்கு இத்தொகை பயன்படுத்திக்கொள்ளப்படும்; வட்டி 5.75 சதவீதம்.

இளைஞர் கழக வெள்ளி விழா

சென்னை-வண்ணைத் தமிழ் இளைஞர் கழகத்தின் வெள்ளி விழா, 16—7—67 காலை 9-30 மணிக்கு மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும். திரு. சி. ஆ. பெ. விசுவநாதம் தலைமை வகிப்பார். அமைச்சர் மா. முத்துசாமி, தி. பொ. வேதாசலம், புலவர் கா. கோவிந்தன், கே. விநயகம் எம்.எல்.ஏ., முகவை இராசமாணிக்கம் மற்றும் பலர் கலந்துகொள்வர்.

அறநிலையக் குழுவில் யாருக்கு இடம்?

சென்னை, ஜூலை 14—

“ஆலயங்களின் அறங்காவலர் குழுக்களில் ஆஸ்தீகர்கள்தான் நியமிக்கப்படுகிறார்களா ?”

என்று சட்டமன்றத்தில், திரு. கரியமாணிக்கம் அம்பலம் கேட்டார்.

பதில் :—“ஆஸ்திகரா இல்லையா என்பதில்லை ; அந்தக் குழுவின் பணியை ஒழுங்காகவும், நாணயமாகவும், முறையாகவும் நிறைவேற்றக்கூடிய மனவளம் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.”

கேள்வி:—“அதே குழுவில் இருப்பவர்கட்குக் கடவுள் பக்தி இருக்கவேண்டுமா ?”

பதில் :—“கோயில்களின் பணி எந்த நோக்கத்துடன் செய்யப்படுகிறதோ அந்த நோக்கம் ஈடேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.”

துவரம் பருப்பில் கலப்படம் செய்தவர்

சிறைத் தண்டனை -- அபராதம் வழங்கப் பெற்றார்

வேலூர், ஜூலை 14—

துவரம் பருப்பில் கலப்படம் செய்ததாக ஆர். கே. அப்துல் சபாருக்கு, மாவட்ட மாஜிஸ்திரேட் உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின்கீழ் ஆறு மாத சிறைத் தண்டனையும்—ரூ. 1,000 அபராதமும் விதித்தார்.

அபராதம் கட்டத் தவறினால் மேற்கொண்டு மூன்று மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

சத்தியவாணிமுத்து வானொலிப் பேச்சு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நம்முடைய உதவி இருவகைப்பட்டது; ஒன்று—உடனடி உதவி; இன்னொன்று—நெடுநாளைய அடிப்படையிலான உதவி.

நடுத்தெருவில் நிற்கும் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் உணவும் உடையும், ஆதரவான இடமும் அளிப்பது இப்பொழுது செய்தாக வேண்டிய பணி.

எதிர்காலத்தில் இத்தகைய இன்னல்களிலிருந்து அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க நாம் மேற்கொள்ளும் பணி, இரண்டாவது கட்டமாகும்.

தீப் பிடிக்க ஏதுவாகக் குடிசைகள் இருப்பதால்தானே, தீய சக்திகள், அவற்றைப் பொசுக்கித் தங்கள் திருவிளையாட்டைக் காட்டுகின்றன ?

செந்தணல் அணுகாச் செம்மைமிகு குடில்களைக் கட்டிக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

சென்னைமாநகரிலுள்ள எல்லாக் குடிசைகளையும் இப்படி மாற்றியமைக்க, முதற்படியாக ஒரு கோடி ரூபாய் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது ; இது நிரந்தர நடவடிக்கை.

இப்பொழுது பாதிக்கப்பட்டு வேதனையுறும் மக்களுக்கு உதவ—தீப்பற்றாத வீடுகளைக் கட்ட அரசு ரூ. 11 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மொத்தம் 1,500 கொட்டகைகள் கட்டப்படும். ஒரு கொட்டகைக்கு ரூ. 750 செலவு பிடிக்கும். இந்தக் கொட்டகைகள் விரைவாக அமைக்கப்பட்டுவருவது, பாதிக்கப்பட்ட மக்கள் வயிற்றில் பால் வார்க்கும் செய்தியாகும்.

மேடு பள்ளங்கள் நிரவப்பட்டு, எழிலான இரும்புச் சட்டக் குடிசைகள் எழுப்பப்படுகின்றன.

நிலத்தைச் சமப்படுத்தி—இரும்புக் கம்பங்கள் நட்டு—இரும்புக் கூரை போட்டு—அதன்மீது கல்நார்த் தகடு வேய்கிறார்கள்! ஏழைகள் இனி வேதனைப் பெருமூச்சுவிடவேண்டி வராது என்பதற்கு இவை கம்பீரமாக நிமிர்ந்து நின்று சான்று சொல்கின்றன!

“மக்கள் வாழ்வில் மாறுதலை—மாபெரும் புரட்சியைத் தோற்றுவிக்கும் இந்த உன்னதப் பணியில் கலந்துகொண்டு, உடன்பிறந்த மக்களுக்கு உதவ வாருங்கள்” என்று உங்கள் அனைவரையும் உள்ளன்போடு கரம் குவித்து அழைக்கிறேன்.

குடிசைகள் தீப்பிடித்துக் கருகியதால் உண்டான கவலைக் கோடுகளுடன், கண்ணீர் ததும்ப வீதியைத் தங்கள் வீடாக்கிக் கொண்டுள்ள மக்களை எண்ணிப் பாருங்கள்!

‘அவர் துயர் துடைக்க நம்மால் ஆனதைச் செய்யவேண்டும்’ என்று அருளுணர்வோடு உங்கள் கையில் கிடைப்பதை அள்ளி அள்ளித் தாருங்கள்!

“கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்”

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். இன்னல் வரும் போதுதான் — கேடு சூழும் பொழுதுதான்—நம்முடைய உண்மையான உறவினர்களை நாம் இனம் கண்டுகொள்ள முடியும்.

நம்மைச் சோதித்துப் பார்க்கும் தருணம் இது! நலிந்த மக்களுக்கு—தீயினால் புண்பட்டு மனமிடிந்து உட்கார்ந்திருக்கும் மக்களுக்கு—நாம் அனைவரும் உண்மையான உறவினர்கள் -- உற்ற நண்பர்கள் என்பதைக் காட்டுவோம்! அவர்களது துயரில் பங்குகொண்டு அவர்களது வாட்டத்தைப் போக்குவோம்!

‘உடுக்கை இழந்தவன் கை போல—அவர்கள் இடுக்கண் களைவோம் வாருங்கள்’ என்று உங்கள் அனைவரையும்—சென்னை மாநகர தீவிபத்து நிவாரணக் குழுத் தலைவர் என்ற முறையில் அன்புடன் அழைக்கின்றேன். வணக்கம்.”

நடக்க இருப்பவை

17--7--67

சிந்தலப்பட்டடை (ஆந்திரம்)

தி.மு.க. சார்பில் மாலை 7-30 மணிக்கு; தலைவர்: ஆர்.பி. குப்புசாமி; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ., என்.ஏ. இரசீத், சித்தூர் நரசிம்மன் எம்.சி., ஏ. இராமலிங்கன், நா. வீராசாமி, மற்றும் பலர்.

18--7--67

சென்னை 100-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு சைதாப்பேட்டை காரணீசுவரர் கோவில் தெருவில்; தலைவர்: செகதீசன்; பேசுவோர்: மதுரை முத்து எம்.எல்.சி., க. வேழவேந்தன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., மைனர் மோசஸ் பி.ஏ.,பி.எல்., சைதை சம்பந்தம் எம்.சி., ஆர்.டி. பாஸ்கரன் எம்.சி., பவளவண்ணன் எம்.சி.

சென்னை 47-வது வட்டம்

எம்.ஜி.ஆர்.மன்ற முதலாண்டு விழா; இரவு 7 மணிக்கு செல்லப்ப முதலித் தெருவில்; தலைவர்: இரா. கோபாலசாமி பேசுவோர்: அமைச்சர் சாதிக் பாட்சா, வி. எஸ்.கோவிந்தராசன்எம்.எல்.ஏ., என்.கிருட்டினன் எம்.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ., எம்.கே. முஸ்தபா, மு. மாசிலாமணி, கோ. கிருட்டினசாமி, நா. ஆதிகேசவலு.

கலை நிகழ்ச்சிகள்

சென்னை 19-வது வட்டம்

கொத்தவால்சாவடி தமிழர் திருவிழாக் குழுவின் சார்பில் 16—7—67 ஞாயிறு இரவு 7-மணிக்கு அண்ணு பிள்ளை தெருவில் ; கே. கோவிந்தசாமி எம்.சி. தலைமையில், சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

திருச்சி 14-வது வட்டம்

தி.மு.க. சார்பில் 16-4 67 இரவு 7-மணிக்கு வடக்கு ஆண்டவர்வீதியில், டி. என். ஆறுமுகம் தலைமையில் மணி—தனலட்சுமி குழுவினரின் கழகக் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கருநாடக மாநில தி.மு.க. நன்றியறிவிப்பு

26—6—67 அன்று கருநாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் நடைபெற்ற ‘விதான் சௌதா சலோ’ (சட்டமன்றம் நோக்கிப் புறப்படுவோம்) போராட்டத்தில் கழகச் சார்பில் பங்குகொண்ட கருநாடக மாநில அமைப்புக் கழகத் தோழர்களுக்கும், முன்கூட்டியே கைது செய்யப்பட்டு தொல்லை அனுபவித்த தோழர்களுக்கும் கருநாடக மாநில தி. மு. க. அமைப்பின் சார்பில் எனது வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி. திராவிடமணி
அமைப்பாளர்
கருநாடக மாநிலம்.

மத்திய அரசு விதித்த வரிகளில் எதையும் குறைப்பதற்கில்லையாம்

மொரார்ஜி தேசாய் கூறுகிறார்

ஐதராபாத், ஜூலை 14—

“இன்னும் ஓராண்டோ அல்லது இரண்டாண்டுகளுக்கோ மத்திய அரசால் விதிக்கப்பட்டிருக்கும் வரிகளில் எதையும் குறைப்பதற்கில்லை”

என்று நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் இங்கு கூறினார்.

முகவரி மாற்றம்

கேரள சுந்தரம்
(மலையாள பேச்சாளர்)
தி. மு. கழகம்,
காட்டூர், கோவை-9.

தமிழக மின் கழகம்

காட்பாடி நகர் விரிவு (வ.ஆ.)

மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு

கீழ்க்கண்ட மின் இயக்க மேற்பார்வையாளர்களின் பார்வையிலுள்ள மின் இணைப்புகள், முறையே ஆரணி, திருவண்ணாமலை வருவாய்த் துறைகளிலிருந்து பிரிக்கப்பட்டு, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் புதிதாக ஏற்படுத்தப்பட்டு, போளூர் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

மாற்றப்பட்டுள்ள பிரிவுகள் :—

1. வந்தவாசி (நகரப் பகுதி)
2. வந்தவாசி (கிராமியப் பகுதி)
3. தெள்ளாறு
4. தேசூர்
5. கீழ்கொடுங்காலூர்
6. வடமாதிமங்கலம்
7. களம்பூர்
8. தேவிகாபுரம்
9. போளூர் (நகரப் பகுதி)
10. போளூர் (கிராமியப் பகுதி)
11. கலசபாக்கம் (கிழக்கு)
12. கலசபாக்கம் (மேற்கு)
13. சேத்துப்பட்டு (வடக்கு)
14. சேத்துப்பட்டு (தெற்கு)
15. சந்தவாசல்

மேற்கண்ட பிரிவுகளிலிருந்து மின்சாரம் பெறுபவர்கள், இந்த அறிவிப்பு கண்ட தினத்திலிருந்து கீழ்க்கண்ட முகவரியிலுள்ள உதவி தலைமை கணக்காயருடன், தங்களது மின் இணைப்புகளுக்கான கணக்குகள் குறித்துக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :—

உதவி தலைமைக் கணக்காயர்,
போளூர் வருவாய்த் துறை பிரிவு,
எண் 3, சன்னதித் தெரு,
போளூர் (வ. ஆ. மா.)

மேற்பார்வை பொறியாளர்
வேலூர் மின் திட்டம்

அமைச்சர்கள் சுற்றுப்பயணம்

ஏ. கோவிந்தசாமி

ஜூலை 16 காலை 9 மணி : வடலூர் துவக்கப் பள்ளி திறப்பு விழா ; 11 மணி : வேப்பங்குறிச்சி ; 12 மணி : நெய்வேலி ; பகல் 3 மணி : சிறுவறுப்பூர் ; 4 மணி : பெருவறுப்பூர் ; 5 மணி : திட்டக்குடி—பட்டா வழங்குதல் ; 5-30 மணி : திட்டக்குடி பெண்கள் உயர்நிலைப் பள்ளி 10-வது வகுப்பு துவக்க விழா ; இரவு 8 மணி : திட்டக்குடி.

செ. மாதவன்

ஜூலை 16 காலை 10 மணி : வேலூர் பொறியியல் துறை ஊழியர் சங்க வரவேற்பு; பகல் 3 மணி : மோட்டார் தொழிலாளர் சங்க வரவேற்பு : 4 மணி : வழக்கறிஞர்கள் சங்க வரவேற்பு; 5 மணி : வேலூர் நகராட்சி வரவேற்பு; இரவு 7 மணி : பொதுக்கூட்டம்.

கே. ஏ. மதியழகன்

ஜூலை 16 மாலை 5 மணி : கும்பகோணம் தமிழ் நாடு வர்த்தகக் கழக மாநில மாநாடு; 7 மணி : வேலூர் பள்ளிக் கட்டட திறப்பு விழா ; 7-30 மணி : மாயூரம் பால் வழங்கு சங்க வரவேற்பு ; இரவு 8-30 மணி : மாயூரம் ஊராட்சி ஒன்றிப்பு வரவேற்பு ; இரவு 9 மணி : பொதுக்கூட்டம்.

கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

ஜூலை 16 : திருக்கண்டலம் ; 17 : பெரியபாளையம், கண்ணப்பாக்கம்; 18 : சென்னை 100-வது வட்டம், ஆதம்பாக்கம் ; 20 : கும்மிடிப்பூண்டி — ஊராட்சிமன்றக் கருத்தரங்கம் 22 : வடசென்னை தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் ; 23 : திருவாரூர் ; 31 : மாவட்டவளர்ச்சி மன்றக் கூட்டம்.

கேரள சுந்தரம் சுற்றுப்பயணம்

ஜூலை 16 : ஈரோடு ; 17 கோவை; 18 : சிறுமுகை ; 19 : மேட்டுப்பாளையம் ; 20, 21 : நீலகிரி ; 22 : குப்பகோணம்புதூர் ; காந்திபுரம் ; 23 : குன்னூர், மேட்டுப்பாளையம், கருவலூர் ; 24 : வெள்ளலூர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.